அர்ச். மத்தேயு சுவிசேஷம் 11:28

வருந்திச் சுமை சுமந்திருக்கிற வர்களாகிய நீங்களெல்லோரும் என் அண்டையில் வாருங்கள், நான் உங்க ளைத் தேற்றுவேன்.

சங்கீதங்கள் 62:1

தேவனே! என்னுடைய தேவனே! விடியற்காலம் விழித்து நான் உம் மைத் தேடுகிறேன்; என் ஆத்துமம் உமதுபேரில் தாகங்கொண்டது; என் சரீரமும்கூட உமது பேரில் எவ்வளவு வாஞ்சை கொண்டது.

எரேமியாஸ் ஆகமம் 6:16

இன்னுங் கர்த்தர் பின்வரு மாறு சொல்லுகிறதாவது: வழியில் நின்று பார்த்துக்கொண்டு: உங்கள் பழைய நடபடிகளென்ன, எது நல்ல வழி என்று விசாரித்து அதில் நட வுங்கள்; அப்போது உங்கள் மனங் குளிருமாம்; அதற்கு அவர்களோ அவ்வழியே செல்லமாட்டோம் என்றார்கள் (மத்.11:20).

சங்கீதங்கள் 4:8

நானோவெனில் சமாதானத் தில் நித்திரை செய்து இளைப்பாறு வேன்.

சங்கீதங்கள் 23:1-2

பூமியும், அதிலடங்கிய சகல மும், பூமண்டலத்தின் சக்கரமும், அதில் வாழுஞ் சகலருந் தேவனுக்குச் சொந்தம். ஏனெனில், அவரே சமுத்திரங் களுக்கு மேலே அதற்கு அஸ்திவாரம் போட்டு நதிகளுக்கு மேலே அதை ஸ்தாபித்திருக்கிறார்.

சங்கீதங்கள் 34:8

அவனறியாத கண்ணியில் அவன் மாட்டிக்கொள்ளக்கடவான்; அவன் மறைவாய் வைத்த வலையில் அவனே பிடிக்கப்படக்கடவான்; அவன் (வைத்த) வலையில் அவனே விழக்கடவான்.

சங்கீதங்கள் 91:1-2

ஆண்டவரைத் துதிப்பதும், உந்நதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவதும், பத்து நரம்பு

வீணையிலும், சுரமண்டலத்திலும், கீதத்தோடு யாழிலும் காலையிலே உமது கிருபை யையும், மாலையிலே உமது உண்மை யையும் அறிவிப்பதும் நேர்த்தியா யிருக்கின்றது.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 11:29-30

என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவனாயிருக்கி றேனென்று என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்போது உங்கள் ஆத்துமங்களுக்கு இளைப்பாற்றியைக் கண்டடைவீர்கள். (எரே. 6:16.) ஏனெனில் என் நுகம் இனிதாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது. (1 அரு. 5:3.) மூ 30. சேசுநாதர்சுவாமியுடைய கட்டளையெல்லாம் தேவசிநேகம் பிறர்சிநேகங்களில் அடங்கியிருக்கிறதினாலேயும், சிநேகமானது எல்லாவற்றையும் இன்பமாக மாற்றுகிறதினாலேயும் சேசுநாதர்சுவாமி: என் நுகம் இனிது, என் சுமை இலகுவானது என்கிறார்.

### இராயப்பர் பொது நிருபம் 1 4:7

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் விவேகிகளாயிருந்து, ஷெஜபம்பண்ணுவதில் விழித்திருங்கள்.

### உபாகமம் 5:12-14

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்தபடியே சாபத் நாளை அர்ச்சிக்கத்தக்கதாக நினைக் கக் கடவாய். ஆறு நாளும் உழைத்து உன் வேலையெல்லாஞ் செய்வாய். ஏழாம் நாளோ சாபத், அதாவது: உன் தேவனாகிய கர்த்த ருடைய ஓய்வு நாளாமே; அதிலே நீயானாலும், உன் குமாரன், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக் காரன், உன் வேலைக்காரியானா லும், உன் மாடு உன் வேசரி உனக் கிருக்கிற வேறெந்த மிருகமானாலும், உன் வாசலினுள்ளிருக்கிற அந்நிய னானாலும் யாதொரு வேலையுஞ் செய்ய வேண்டாம். நீ இளைப் பாறுவது போல் உன் வேலைக் காரனும் உன் வேலைக்காரியும் இளைப்பாற வேண்டும் (ஆதி.2:2; யாத்.20:10; எபி.4:4).